JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC/ 203 /2022 |
| | : | Prosecution P.W –5 |
| NAME | : | மாரியப்பன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 03.02.2026.

**முதல் விசாரணை**

நான் காவல்துறையில் பணியாற்றி தற்போது ஓய்வுபெற்று கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 27.02.2022ம் தேதி நான் சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் 12மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சங்கனாபேரி நடுத்தெரு திருமலைமுத்து மகன் சிவசக்தி விநாயக வேல்சாமி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் 13.30 மணிக்கு வந்து மேற்படி வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப சொக்கம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 57/2022 இந்திய தண்டனை சட்டம் இதசபிரிவுகள் 294(b), 324, 506(1) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவலறிக்கை அசலையும் புகார் வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தென்காசிக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன்.

இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கடையநல்லூர் மருத்துவமனைக்கு பகல் 12.20 மணிக்கு சென்றேன். நிலையத்தில் இருக்கும் போது எனக்கு போன் மூலமாக தகவல் வந்தது. மருத்துவமனைக்கு சென்று விபத்து தகவல் பெற்றேனா என்றால் பெற்றேன். மேற்படி விபத்து தகவல் எழுத்து மூலமான தகவல் என்றால் சரிதான். இந்த தகவலையும் நான் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்றால் சரிதான். சொக்கம்பட்டி காவல்நிலையத்திற்கும் அப்போதிருந்த தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே தூரம் 30 கி.மீ இருக்கும். பேருந்து மூலமாகவோ, இருசக்கர வாகனத்திலோ சுமார் ஒரு மணி நேரத்தில் அப்போதிருந்த தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு சென்று விடலாம் என்றால் சரிதான். நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கையை யார் மூலம் எத்தனைமணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம் என்றால் எப்போதுமே மறுநாள் காலையில் தான் வழக்கமாக அனுப்பி வைப்போம். தலைமை காவலர் வேல்துரை என்பவரி மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். நான் பதிவு பண்ணதாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கையை வேல்துரை என்பவர் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக துலங்காது என்றால் முதல் தகவல் அறிக்கையை இன்னார் மூலம் அனுப்பி வைப்பதாக குறிப்பிடுவது இல்லை.

இந்த முதல் தகவல் அறிக்கையை மறுநாள் தான் அனுப்பினோம் என்றால் சரிதான். நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு அனுப்பபட்ட நாள் 27.02.2022 என முதல் தகவல் அறிக்கை காலம் எண் 15 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எத்தனை மணிக்கு அனுப்பி வைத்தோம் என குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கையானது நீதித்துறை நடுவரால் மிகவும் காலதாமதமாக 16.03.2022 அன்று காலை 11 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் மிகவும் காலதாமதமாக வழக்கிற்காக முதல் தகவல் அறிக்கை எங்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi